**கவனிக்க.-** *23.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1752 - 2012 මාර්තු මස 30 වැනි සිකුරාදා - 2012.03.30

*1752 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 748 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்க வேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் அண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவரால் ஒழுங்கு செய்யப்பட்டு, 2011.01.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1691 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாணத்தின் மாநகர சபை அதிகாரப் பிரதேசங்களில் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகளை அழித்தல் தொடர்பான வரைவுத் துணைவிதிகள் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையில் 2011.07.26 ந் திகதி நடத்தப்பட்ட மாகாண சபைக் கூட்டத்தில் பின்வரும் திருத்தங்களைச் செய்து கொள்வதற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

கே. ஏ. எஸ். கீரகல,<br>
செயலாளர்,<br>
உள்ளூராட்சி அமைச்சு,<br>
சப்பிரகமுவ மாகாண மாகாண சபை.

*2012.12.15.*

### மாநகர சபையில் அங்கீகரிக்கப்பட்ட வரைவுத் துணைவிதியின் திருத்தங்கள்

1. 2011.01.28 ஆந் திகதியும் 1691 ஆம் இலக்கமும் உடைய வர்த்தமானியின் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைவுத் துணைவிதியின் 3 (VII) ஆம் விதியின் ''உணவுகளுக்காக அல்லது அலங்காரத்துக்காக'' என்னும் சொற்களுக்குப் பின்பு ''மருந்துகள்'' என்னும் சொல் உட்படுத்தப்படுகின்றது.

2. 9 ஆம் பிரிவில் ''மனையிடம்'' என்பது ஒரு காணியை, வீட்டை கட்டடத்தை அல்லது ஒரு நிர்மாணிப்பை, உபயோகிக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட கிணறொன்றை என்ற சொற்களுக்குப் பின்பு ''சுரங்கக் குழியொன்றை'' என்ற சொற்கள் உட்படுத்தப்படுகின்றது.

*3-1057/1*

## அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்க வேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் அண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவரால் ஒழுங்கு செய்யப்பட்டு, 2011.01.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1691 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாணத்தின் நகர சபை அதிகாரப் பிரதேசங்களில் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகளை அழித்தல் தொடர்பான வரைவுத் துணைவிதிகள் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையில் 2011.07.26 ந் திகதி நடத்தப்பட்ட மாகாண சபைக் கூட்டத்தில் பின்வரும் திருத்தங்களைச் செய்து கொள்வதற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

கே. ஏ. எஸ். கீரகல,<br>
செயலாளர்,<br>
உள்ளூராட்சி அமைச்சு,<br>
சப்பிரகமுவ மாகாண சபை.

*2012.12.15.*

### நகர சபையில் அங்கீகரிக்கப்பட்ட வரைவுத் துணைவிதியின் திருத்தங்கள்

1. 2011.01.08 ஆந் திகதியும் 1691 ஆம் இலக்கமும் உடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள் விதிக்கப்படும் அறிவித்தலின் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ''மாநகர சபை'' என்பதை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ''நகர சபை'' என்பதை உட்படுத்தல்.

2. 3 (vii) விதியில் ''உணவுகளுக்காக'' அல்லது ''அலங்காரத்துக்காக'' என்பவனவற்றிற்கு பின்பு ''மருந்துகள்'' என்ற சொல்லை உட்படுத்தல்.

3. 9 ஆம் பிரிவில் ''மனையிடம்'' என்பது ஒரு காணியை, வீட்டை கட்டடத்தை அல்லது ஒரு நிர்மாணிப்பை, உபயோகிக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட கிணறொன்றை என்ற சொற்களுக்குப் பின்பு ''சுரங்கக் குழியொன்றை'' என்ற சொற்கள் உட்படுத்தப்படுகின்றது.

*3-1057/2*

---

## அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ( பந்தியுடன் வாசிக்க வேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் அண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவரால் ஒழுங்கு செய்யப்பட்டு, 2011.01.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1691 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பதிரிகையின் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாணத்தின் பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களில் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகளை அழித்தல் தொடர்பான வரைவுத் துணைவிதிகள் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையில்*

2011.07.26 ந் திகதி நடத்தப்பட்ட மாகாண சபைக் கூட்டத்தில் பின்வரும் திருத்தங்களைச் செய்து கொள்வதற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கே. ஏ. எஸ். கீரகல,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு,
சப்பிரகமுவ மாகாண சபை.

2012.12.15.

**பிரதேச சபையில் அங்கீகரிக்கப்பட்ட வரைவுத் துணைவிதியின் திருத்தங்கள்**

1. 2011.01.28 ஆந் திகதியும் 1691 ஆம் இலக்கமும் உடைய வர்த்தமானியின் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைவுத் துணைவிதியின் 3 (VII) ஆம் விதியின் ''உணவுகளுக்காக அல்லது அலங்காரத்துக்காக'' என்னும் சொற்களுக்குப் பின்பு ''மருந்துகள்'' என்னும் சொல் உட்படுத்தப்படுகின்றது.

2. 9 ஆம் பிரிவில் ''மனையிடம்'' என்பது ஒரு காணியை, வீட்டை கட்டடத்தை அல்லது ஒரு நிர்மாணிப்பை, உபயோகிக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட கிணறொன்றை என்ற சொற்களுக்குப் பின்பு ''சுரங்கக் குழியொன்றை'' என்ற சொற்கள் உட்படுத்தப்படுகின்றது.

3-1057/3